**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4623

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.10.2021

Accepted: 23.12.2021

Published: 01.01.2022

Citation:
Rameshkumar, M. "Kanniyamman Worship of Irulas." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 46–52.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4623

*Corresponding Author:
rameshkumarida@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Kanniyamman Worship of Irulas

**Dr. M. Rameshkumar**
*Assistant Professor, Department of Linguistics, Tamil University, Thanjavur*
http://orcid.org/0000-0003-1912-9843

**Abstract -** Irulas are identified by their dark bodies (Black). The word 'Erular' is the oldest form of them. In this word changed in to 'Irula' in the medial period. They are live in the Coimbatore area and also the neighboring states of Tamil Nadu. Irulas worshipped nature and their ancestors lived as nomads. The people of Irula community had their own beliefs, traditional stories, festivals and rituals even now they observe their believes. Tell the stories celebrate the festivals and perform rituals. They have several gods according to their community as family deity. However, the festival of Kanniyamman of the Irular tribes is celebrated on the beach in the month of Masi (Feb) that is full moon day celebration or Masimaham worship. All the Irula People from various parts of South India gather in the Mamallapuram beach. They believe Kanniyamman angers every year for their wrongs and goes to Mamallaburam beach. On the day of Masimaham and full moon day they celebrate and invite Kanniyamman to their homes. The same day night they celebrate with traditional folk songs, dances and awareness programmes. Next day early morning, they build seven steps and a small tent for Kanniyamman. Then, the Irulas arrange marriages and other ceremonies on the beach. This research paper is to document the Kanniyamman Masimaham ceremony.

**Keywords:** Tamil Nadu, Tribes, Nomads, Tribal, Irular, Folk songs, Deity, Kanniyamman, Ceremony.

**References**

1. Agathiyalingaom, S. (Edi) 1972. Tamilaka palangudikal, Annamalainagar, Araychi manavar veliyidu. PP:73-100.
2. Perialwar, R. 1979, *Phonology of Irula with Vocabulary,* Annamalai University.
3. Perialwar, R. 1998. *Nilagiri Pandaiya Palangudiyinar O:r arimugam*, Ooty, Director Tribal Research centre. PP:55-78.
4. Gunasekaran, K. 2008. Irularkal o:r arimukam, Chennai, Kilakkup Pathippakam.
5. Perumal, K and Rameshkumar, M. 2020. *pa:rappaTTi Irular Valviyal*, Tamil University, Thanjavur. (Unpublished Thesis).
6. Suresh, P. 2019. VeTTakka:Du Irulas valipa:TTu murakal, Pathivukal Ithal.
7. Sathya, S. *Irulas sadangukal matrum nambikkaikal*, Muththukkamalam Online Journal.
8. Balasubramanian su, Irularkal, Chennai, Bharathi Puthakalayam.

# இருளர்களின் கன்னியம்மன் வழிபாடு

**முனைவர் மா. ரமேஷ் குமார்**
உதவிப் பேராசிரியர், மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**ஆய்வுச் சுருக்கம்**
*மக்கள் நாடோடிகளாக வாழ்ந்து வந்த காலத்தில் இயற்கை வழிபாட்டையும் இறந்த முன்னோர்களை வழிபடுவதையும் வாழ்வியலில் அங்கமாகக் கொண்டிருந்தனர். அவர்களிடையே காணப்படும் செவிவழிச் செய்திகள், வாய்ப்பாட்டுகள், கதைகள் ஆகியவை அவர்களின் நம்பிக்கைகளாகவும் பண்பாட்டைப் பேணிக் காப்பதாகவும் இருந்துவருகின்றன. சமுதாயம் வேறு சமுதாயத்துடன் சார்ந்து இருக்கும் மொழியும் பண்பாடும் வேறல்ல ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. இருளர் பழங்குடி மக்களிடமும் ஏராளமான நம்பிக்கைகள் கதைப்பாடல்கள், வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. தென்னிந்தியாவின் பல்வேறுப் பகுதிகளில் வாழும் இப்பழங்குடிகள் ஆங்காங்கு தங்கள் வாழ்விடத்தின் அருகில் உள்ள சிறுசிறு தெய்வங்களை வழிபடுகின்றனர். இருப்பினும், இருளர் பழங்குடிகளை ஒன்றிணைக்கும் விழாவாக மாசி மாதம் கடற்கரையில் கன்னியம்மன் வழிபாடு விளங்குகின்றது. இவ்விழாவை ஆவணப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***திறவுச் சொற்கள்:** தமிழகப் பழங்குடிகள், நாடோடிகள், பழங்குடி, இருளர், நாட்டு பாடல்கள், தெய்வம், கன்னியம்மன், விழா.*

## இருளர்கள்

கருத்த இருள் நிறத்தைப் போல உடலமைப்புக் காணப்படுவதால் இவர்கள் இருளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் இருளில் இருந்து தோன்றியதால் இருளர்கள் என்று அழைக்கப்படுவதாகவும் நம்பப்படுகிறது. இவர்களின் முன்னோர்கள் அடர்ந்த வனப்பகுதிகளில் சூரிய வெளிச்சம் உட்புகாத இருண்ட அடர்த்தியான காடுகளில் வாழ்ந்தவர்கள் என்றும் குறிப்பிடுகின்றனர். மேலும் “எருளர்” என்பது இவர்களைக் குறிக்கும் பழமையான சொல்லாகும். இச்சொல் “இருளர்” என்று மருவி வந்துள்ளது என்றும் கூறப்படுகிறது. கருத்த வலிமையான உடலமைப்பே இவர்களின் அடையாளமாக இருந்துள்ளது. இன்றும் அதே கருத்த நிறத்தில் பட்டியலின பழங்குடிமக்களாக, உணவுப் பற்றாக்குறையினால் சிலர் மெலிந்த உடலமைப்புடன் காணப்படுகின்றனர்.

## குலதெய்வ வழிபாடு



**மதுக்கரை சின்னம்பதி இருளர் குலதெய்வம்**

குலம் தழைக்க குலதெய்வ வழிபாடு வேண்டும் என்ற முதுமொழிக்கேற்ப இன்றளவும் குலதெய்வ வழிபாடுகள் மக்களிடையே இருந்துவருகின்றன. இருளர்கள் மத்தியில் பல்வேறு குலங்கள் காணப்படுகின்றன. இவர்களிடையே ஒவ்வோர் குலத்திற்கும்

தனித்தனி குல தெய்வங்கள் உள்ளன. அத்தெய்வத்தின்மீது பாடும் பாடல்கள் “பேபாட்டு” என்று அழைக்கப்படுகின்றன. பல்வேறு குலதெய்வங்கள் இருந்தாலும் கன்னியம்மனைக் குலதெய்வமாக அனைத்துக் குல இருளர்களும் ஏற்றுகொண்டு வழிபடும் வழக்கம் இம்மக்களிடையே காணப்படுகின்றது.

**கன்னியம்மன் வரலாறு**

இருளர்களிடையே கதை கூறும் மரபு ஆண்டாண்டுகாலமாய் இருந்து வருகின்றது. அக்கதைகளில்கன்னியம்மன்வழிபாடுபற்றி ஏராளமான கதைகள் உள்ளன. இவர்களின் குலத்தில் பிறந்த பெண் தெய்வமாக மாறியதைக் கூறும் வரலாற்றுக் கதைகள் குறிப்பிடத்தக்கனவாகும். அடர்ந்த காடு களில் காலங்காலமாக வாழ்ந்துவந்த இருளர் தங்கள் குலத்தில் பிறந்த பெண் கன்னியம்மா என்று குறிப்பிடுகின்றனர். அந்தப்பெண் இறந்தபிறகு இருளர்களின் குலதெய்வமாக மாறி மக்களைக் காத்து வருகின்றாள் என்றும் நம்புகின்றனர். இவர்கள் வேட்டைக்கு செல்லும்பொழுது வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் இருந்ததாகவும்; இன்றளவும் வழித்து ணையாக இருந்து வருகின்றாள் என்றும் நம்புகின்றனர்.

இது மட்டும் அல்லாமல் மேலும் பல கதைகளும் கன்னியம்மன் குறித்து நிலவுகின்றன. அவற்றுள் உடும்பு கதையும் ஒன்று. எங்கள் முன்னோர்கள் ஒரு காலத்தில் மரம் வெட்டி, வேட்டையாடி தான் பிழைத்தார்கள். மரங்களும், விலங்குகளும் ஓர் உயிர் தானே, அதனால் எங்களுக்குப் பாவம் அதிகமாய் சேர்ந்தது. இந்த நேரத்தில் முன்னோர் ஒருத்தர் கஷ்டப்பட்டு ஓர் உடும்பை வேட்டையாடினார். வேட்டையாடியதுக்குப் பிறகு வாலைப் பிடித்துதான் தூக்குவோம். அவர் உடும்பின் வாலைப் பிடித்து தூக்குகின்றபொழுது, அந்த உடும்புக்குத் திடீர் என்று உயிர் வந்துவிட்டது. உடும்பு கடல் நோக்கி இழுக்கின்றது, இவர் உடும்பின் வாலைப் பிடித்து இந்தப் பக்கமாக இழுக்கின்றார். இவர் பிடிவாதமாக உடும்பின் வாலைவிடவே இல்லை. கடைசில உடும்புதான் வெற்றி பெற்றது. உடும்பு அவரைக் கடலுக்குள் இழுத்துக் கொண்டு போய்விட்டது. அதன்பிறகு அவர் திரும்பி வரவே இல்லை. அவரை காப்பாத்தப்போன எங்களுடைய குலதெய்வமும் திரும்பி வரவில்லை. நாங்கள் வேண்டினதுக்கு அப்புறம் மாசி முழுநிலவு அன்றைக்குத்தான் கன்னியம்மன் திரும்பி வந்தது என்று கூறுகின்றனர்.

**மாசிப் பௌர்ணமி (மாசிமகப் பெருவிழா)**



**மாசிமகம் கன்னியம்மன் உற்சவ சிலை உடன் வீரக்காரன் சாமி**

ஆடிமாதத்தில் இருளர்கள் தங்களின் குலதெய்வ வழிபாட்டை விமரிசையாகக் கொண்டாடுவார்கள். இத்திருவிழா முடிந்தவுடன் கன்னியம்மன் இவர்களுடன் கோபித்துக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் கடற்கரைக்கு வந்துவிடும் என்று நம்பப்படுகின்றது. இதனால் கோபித்துக்கொண்டு வந்த கன்னியம்மனை திரும்பவும் அழைத்துச்செல்வதற்காக எல்லா திசைகளில் இருந்தும் மக்கள் மாமல்லபுரம் கடற்கரையைநோக்கி குடும்பம் குடும்பமாக வருகின்றனர். இதிலும் பலர் மாசி மாத பௌர்னமிக்கு ஒருநாள் முன்பாகவும் சிலர் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பாகவும்

இக்கடற்கரையில் கூடுகின்றனர். அவ்வாறு கூடும்பொழுது தாங்கள் கொண்டுவந்துள்ள துணிகளில், சேலை, போர்வை அல்லது தார்ப்பாய்களால் சிறு சிறு குடில்களை அமைத்து தங்குகின்றனர். இக்குடில்கள் வட்டவடிவமாகவும், கூரை போன்றும், கூடாரம் கொட்டாய் போலவும் அமைக்கின்றனர். பௌர்னமி நிலவொளியில் விடிய விடிய விழாக்கோலமாக மக்கள் வெட்ட வெளியில் மகிழ்ச்சியுடன் கடற்கரையில் இராப்பொழுதைக் கழிக்கின்றனர். இதில் இருளர்களின் பாரம்பரிய நடனம், விழிப்புணர்வு நாடகங்கள், ஆடலும் பாடலும் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகளால் மக்கள் இரவுப்பொழுதின் தூக்கத்தை மறந்து விடியலை நோக்கி காத்துக்கொன்டிருப்பர்.

### ஏழு கன்னிமார்

சிறு சிறு பெண் உருவங்களால் ஆன ஏழு பெண் உருவத்தைச் சப்த கன்னிகள், ஏழு கன்னிமார், ஏழு தாய்மார்கள் என்று பலவாறு அழைக்கப்படும் கன்னி வழிபாடு நாட்டார் தெய்வமாகவும்,சிறு தெய்வ வழிபாடாகவும் ஏழு கற்கள் அல்லது செங்கற்களை நட்டுவைத்து கன்னி வழிபாட்டை நடத்துகின்றனர். ஆனால் இருளர்கள் பொதுவான பெயரில் கன்னியம்மன் என்ற பெண் தெய்வத்தை வழிபட்டுவருகின்றனர்.

### கன்னியம்மன் கோபித்தல்

மாசி மாதத்திற்கு ஒருமாதத்திற்கு முன்போ அல்லது மூன்று மாதங்களுக்கு முன்பாகவோ இருளர்களின் செயல்பாட்டின்மீது கோபம் கொண்ட கன்னியம்மன் கடற்கரையில் குடியேறுகிறாள். அவ்வாறு கோபித்துக் கொண்டு வந்த கன்னியம்மனைத் தேடி மாமல்லபுரத்திற்கு இப்பழங்குடிகள் வருகின்றனர். கன்னியம்மனைத் தேடி வரும்பொழுது இப்பாடலைப் பாடி வழிபடுகின்றனர்.

***எங்க சாமி எங்க போச்சோ !!!!! நான் எங்க கண்டு தேடுவனோ !!!!!***
***எங்க சாமி எங்க போச்சோ !!!!! நான் எங்க கண்டு தேடுவனோ !!!!!***
***ஏலேலோ கன்னியம்மா ஏலேலோ மாரியம்மா !!!!!***
***ஏலேலோ கன்னியம்மா ஏலேலோ மாரியம்மா !!!!!***
***காட்டுவழியே போனாலும் கன்னியம்மா கோவிலம்மா !!!!!***
***காட்டுவழியே போனாலும் கன்னியம்மா கோவிலம்மா !!!!!***
***எங்க சாமி எங்க போச்சோ !!!!! நான் எங்க கண்டு தேடுவனோ !!!!!***
***எங்க சாமி எங்க போச்சோ !!!!! நான் எங்க கண்டு தேடுவனோ !!!!!***
***ஏலேலோ கன்னியம்மா ஏலேலோ மாரியம்மா !!!!!***
***ஏலேலோ கன்னியம்மா ஏலேலோ மாரியம்மா !!!!!***

மாசிமகத்தன்று அதிகாலையில் ஏழு கன்னிகளும் கரையேறுகின்றனர். அவற்றுள் மூத்தக் கன்னியிடமோ அல்லது இளையக் கன்னியிடமோ தங்களது வேண்டுதலை முன்வைக்கும் மரபாக இத்திருவிழா நடைபெறுகின்றது. சிலர் கடல்கன்னியிடம் வேண்டுகிறோம் என்றும் கூறுவதுண்டு.

### கன்னியம்மனைச் சாமியாடி அழைத்தல்



**ஏழுகன்னியரின் ஏழு படிக்கட்டுகள் மாமல்லபுரம் கடற்கரை**

விடியற்காலையில் குடும்பத்தில் உள்ள அனைவரும் கடலில் நீராடிவிட்டு சந்தனம், திருநீறு ஆகியவற்றை உடல்மேல் பூசிக் கொண்டு கடல் அலை வந்து செல்லும் தூரத்தில் கடற்பரப்பில் ஆங்காங்கு மணலில் கோபுரமும், வேப்பிலைக் கொத்துகளால் சிறு சிறு பந்தல்களும் அமைக்கின்றனர். அதன்பின், பந்தலின் முன்பாக ஏழு கன்னிமாரைக் குறிக்கும்விதமாக இம்மக்கள் ஏழு படிகட்டுகளைப் போல் மணலைக் கூட்டி வடிவமைக்கின்றனர். ஏழு படிக்கட்டுகளையும் ஏழு கன்னிகளின் இருப்பிடமாக அமைக்கின்றனர். அந்த படிக்கட்டுகளின் மீது மஞ்சள், சந்தனம், சிகப்பு, திருநீறு, பூக்கள், மற்றும் தேங்காய் பழங்களைக்கொண்டு அலங்கரிக்கின்றனர். கன்னியம்மனுக்கு பொங்கல் வைத்து மாவிளக்குகளும் ஏற்றப்படுகின்றன. கடற்கரை மணலில் ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ள பந்தலையும் ஏழு படிகட்டுக்களையும் சுற்றி நின்று வழிபாட்டைத் தொடங்குகின்றனர். குடும்பத்தில் மருள் வந்து சாமியாடி அருள்வாக்குச் சொல்ல தயாராக இருப்பார்.

கன்னியம்மன் அழைப்புப் பாடல் பாடி கன்னியம்மனை அழைப்பார்கள். குடும்பத்தினரின் ஒரு சேர உரத்தகுரலில் ஒலி எழுப்பிக்கொண்டு கன்னியம்மனை வர அழைக்கின்றனர். இப்பாடல் கன்னியம்மன் அழைப்பு பாடல்களில் ஒன்றகும்.

**கற்பூரம் இல்லாம கிளம்பாது சாமி**
**கற்பூரம் இல்லாம கிளம்பாது சாமி**
**ஒருநாளா திருநாளா ஊராரு சுகம்தானா**
**ஒருநாளா திருநாளா ஊராரு சுகம்தானா**
**முழங்காலு தண்ணியிலே அம்மா விளையாடும் கரையிலே**
**முழங்காலு தண்ணியிலே அம்மா விளையாடும் கரையிலே**
**அலையே என்சிலையே நீ வாம்மா என் முன்னாலே**
**அலையே என்சிலையே நீ வாம்மா என் முன்னாலே**

**கற்பூரம் இல்லாம கிளம்பாது சாமி**
**கற்பூரம் இல்லாம கிளம்பாது சாமி**
**ஒருநாளாம் திருநாளாம் ஊராரு சுகம்தானா**
**கொட்டைப்பூ தோட்டமா நாம கொட்டைப்பறிக்க வாட்டமா**
**கொட்டைப்பூ தோட்டமா நாம கொட்டைப்பறிக்க வாட்டமா**
**அலையே என்சிலையே நீ வாம்மா என் முன்னாலே**
**அலையே என்சிலையே நீ வாம்மா என் முன்னாலே**

**கற்பூரம் இல்லாம கிளம்பாது சாமி**
**கற்பூரம் இல்லாம கிளம்பாது சாமி**
**எட்டைப்பூ தோட்டமா நாம எட்டைப்பறிக்க வாட்டமா**
**எட்டைப்பூ தோட்டமா நாமஎட்டைப்பறிக்க வாட்டமா**
**அலையே என்சிலையே நீ வாம்மா என் முன்னாலே**
**அலையே என்சிலையே நீ வாம்மா என் முன்னாலே**

**கற்பூரம் இல்லாம கிளம்பாது சாமி**
**தாலாம்பூ தோட்டமா நாம தாவீபறிக்க வாட்டமா**
**அலையே என்சிலையே வாம்மா என் முன்னாலே**
**அலையே என்சிலையே வாம்மா என் முன்னாலே**

கற்பூரம் இல்லாம கிளம்பாது சாமி
கற்பூரம் இல்லாம கிளம்பாது சாமி
ஒருநாளாம் திருநாளாம் ஊராரு சுகம்தானா
ஒருநாளாம் திருநாளாம் ஊராரு சுகம்தானா
முழங்காலு தண்ணியிலே அம்மா விளையாடும் கரையிலே
முழங்காலு தண்ணியிலே அம்மா விளையாடும் கரையிலே

**அலையே என்சிலையே நீ வாம்மா என் முன்னாலே**
**அலையே என்சிலையே நீ வாம்மா என் முன்னாலே**

இவ்வாறு அம்மனை அழைப்பதினால் குடும்பத்தில் ஒருவர் மேல் கன்னியம்மன் (மருள்) வருகின்றது. அவர்கள் மிகுந்த ஒலியை எழுப்பிக்கொண்டு தவழ்ந்தும் மண்டியிட்டும் ஏழு படிக்கட்டுக்கும் கடலுக்கும் இடையில் முன்னும் பின்னுமாக ஓடுகின்றனர். அவ்வாறு ஓடுகையில் இறுதியில் குடும்பத்தினர் அவரைக் கடலில் முழுகிவிடாமல் பிடித்துவந்து கரையில் சேர்த்துக் குறி கேட்க தயாராக இருக்கின்றனர். சாமி வந்தவர் தனது ஆக்ரோசமான நடவடிக்கையில் இருந்து இயல்புநிலைக்கு வரும்வரை அவருடைய குடும்பத்தினர் காத்திருக்கின்றனர். வேகம் குறைந்தவுடன் பெண்கள், வயது முதிர்ந்த பெரியவர்களால் அருள்வாக்குக் கேட்கப்படுகின்றது. ஒரு குடும்பத்தில் ஒருவர்மீது கன்னியம்மன் இறங்கினால் அவரே ஆண்டுதோறும் கன்னியம்மனை ஏற்கிறார். அவரால் முடியவில்லை என்றால் பூநூல் போட்டு குடும்பத்தில் வேறு ஒருவருக்கு இந்த பொறுப்பை மாற்றி விடுகின்றனர். இதில் எந்தவித வயது வேறுபாடும் கிடையாது. படியில் வைத்து படைக்கப்பட்ட பொருட்களும் புடவை, ரவிக்கை துணியும் சேர்த்து மருள் வந்து சாமியாடியவர் தனது உடன்பிறந்த தங்கைக்கோ அல்லது தன்னுடைய மகள்களுக்கோ வழங்குவார். இதனையடுத்து அடுத்த ஆண்டுவரைச் செய்யவேண்டிய நல்ல காரியங்கள் அனைத்திற்கும் கன்னியம்மன் துணை வேண்டும். அம்மன் அருள் இல்லாமல் எதுவும் நடக்காது என்று இருளர்கள் நம்புகின்றனர். கன்னியம்மனிடமிருந்து நல்ல குறிகளைப் பெறுகின்றனர். இதற்கடுத்து அனைத்து நிகழ்வுகளும் கடற்கரையில் தொடங்குகின்றன.

**வாழ்வியல் தொடக்கம்**

கன்னியம்மன் அருள்வாக்குக் கூறிமுடித்ததும் கூடிய கூட்டத்தினரில் பலர் கடற்கரையில் எளிய முறையில் திருமணம் செய்கின்றனர். இத்தகைய திருமணங்கள் பெரும்பாலும் சென்ற ஆண்டில் இதே மாசிமகத்தன்று இக்கடற்கரையிலேயே நிச்சயக்கப்பட்டவையாக இருக்கும். இருளர்கள் தங்கள் இனத்தவரையே திருமணம் செய்ய விரும்புகின்றனர். ஆதலால் இருவீட்டினரும் மனமுவந்து இளம்பருவப் பிள்ளைகளுக்கு கலியாணம் முடித்து வைக்கின்றனர். கடற்கரையில் இளம் வயதிலேயே திருமணம் செய்துகொள்வது கன்னியம்மனையே திருமணம் செய்து கொள்வதாகவும் நம்புகின்றனர்.

முடிக்காணிக்கை; புதிதாக பிறந்த குழந்தைகளுக்கும் நினைத்த காரியம் நிறவேற வேண்டும் என்று வேண்டுதல் வைத்தவர்களுக்கும் நோய்நொடி சீக்கிரம் குணமாக வேண்டும் என்று வேண்டிக்கொண்டவர்களும் முடிக்காணிக்கையளிக்கின்றனர். இளம் பருவ பிள்ளைகளுக்கு சிலர் காது குத்துகின்றனர். பெண்பார்ப்பது, புதிய தொழில் தொடங்குவது என்று அனைத்து நிகழ்வுகளும் கடற்கரையில் அச்சாரமிடப்படுகின்றன.

**முடிவுரை**

இருளர்கள் சிறு தெய்வ வழிபாடுகளைச் செய்தாலும் கன்னியம்மனைத் தங்களின் சமூக வாழ்வியலின் அங்கமாகவே கருதுகின்றனர். ஒரு நாள் விழாவிற்காக கூட்டம் கூட்டமாக இணைந்து பிரிகின்றனர். உறவுகளை பலப்படுத்தவும் மன மகிழ்சிக்காகவும் மாமல்லபுரம் கடற்கரையில் கூடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். விழா, சடங்குகள், ஆட்டம், கொண்டாட்டம் என்று மகிழ்ச்சியின் உச்சிக்கு சென்று திரும்புகின்றனர். மார்கழியில் கோபித்துக் கொண்டு வந்த கன்னியம்மனை ஆண்டுதோறும் மாசி மாதத்தில் தங்களுடன் அழைத்துச்

செல்வதாக இம்மக்களின் இறைநம்பிக்கை வெளிப்படுகின்றது.

**துணை நூற்பட்டியல்**

1. அகத்தியலிங்கம், ச. (பதி) (1972). *தமிழகப் பழங்குடிகள்,* அண்ணாமலை நகர், ஆராய்ச்சி மாணவர் வெளியீடு. ப: 73-100
2. பெரியாழ்வார் ஆர். (1979), Phonology of Irula with Vocabulary, Annamalai University.
3. ............... (1998). *நீலகிரி பண்டைய பழங்குடியினர் ஓர் அறிமுகம்,* உதகமண்டலம், இயக்குநர் பழங்குடியினர் ஆய்வு மையம். ப:55-78.
4. குணசேகரன், க. (2008). *இருளர்கள் ஓர் அறிமுகம்.* சென்னை, கிழக்கு பதிப்பகம்.
5. பெருமாள், கி மற்றும் ரமேஷ்குமார், மா. (2020). *பாறப்பட்டி இருளர் வாழ்வியல்.* தஞ்சாவூர் (ஆய்வேடு), தமிழ்ப் பல்கலைக்கழகம்.
6. சுரேஷ், பெ. (2019). *வெட்டக்காடு இருளர்களின் வழிபாட்டு முறைகள்.* பதிவுகள் இதழ்.
7. சத்யா, சு. *இருளர்களின் சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள்,* முத்துக்கமலம் இணைய இதழ்.
8. பாலசுப்பிரமணியன். சு, *இருளர்கள்,* பாரதி புத்தகாலயம்.